<u>**பத்திரிக்கைச் செய்தி**</u>

<u>தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு.</u>

<u>**மேலப்பாளையம் SDAT ஸ்டேடியத்தில் கோடை கால பயிற்சி முகாம் கோலாகல துவக்கம்**</u>

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருநெல்வேலி பிரிவின் கீழ் செயல்பட்டு வரும், மேலப்பாளையம் SDAT விளையாட்டு அரங்கத்தில் கோடை கால பயிற்சி முகாம் 21.04.2017 அன்று காலை 6.15 மணிக்கு கோலாகலமாக தொடங்கியது.

<u>**மேலப்பாளையம் SDAT விளையாட்டு அரங்கம்**</u>

<u>**5 நாட்கள் உலகத் திறனாய்வு திட்ட கோடை கால பயிற்சி முகாம்**</u>

இப்பயிற்சி முகாமானது 6,7,8 வகுப்புகள் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு பிரத்யேகமாக 21.04.2017முதல் 25.04.2017 வரை தினமும் காலை 6.15 மணி முதல் காலை 8.30 மணி வரை நடைபெறுகிறது. இப்பயிற்சி முகாமில் அடிப்படை விளையாட்டுத் திறன் Speed, Strength, Endurance, Flexibility and Combine Motor Qualities போன்ற அடிப்படை விளையாட்டு திறன்களை மேம்படுத்த அறிவியல் அடிப்படையிலான பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

<u>15 நாட்கள் கோடை கால பயிற்சி முகாம் (அனைத்து வயதினருக்கும்)</u>

இப்பயிற்சி முகாமானது அனைத்து வயதினருக்கும் 1.தடகளம், 2. இறகுப்பந்து, 3. கூடைப்பந்து, 4. குத்துச்சண்டை, 5. கிரிக்கெட், 6. கால்பந்து, 7. வாள்சண்டை, 8. ஜிம்னாஸ்டிக்ஸ், 9.கைப்பந்து, 10. ஹாக்கி, 11. டேக்வாண்டோ, 12. வாலிபால், 13. பளுதூக்குதல், 14.கபாடி, 15. மேசைப்பந்து, 16. டென்னிஸ், 17. ஜீடோ, 18. ஸ்குவாஷ் மற்றும் 19. வில்வித்தை ஆகிய விளையாட்டுக்களுக்கு பிரத்யேகமாக பயிற்சி முகாம் 21.04.2017 முதல் 05.05.2017 வரை நடைபெறுகிறது. நுழைவு கட்டணம் இல்லை. அனைவரும் இலவசமாக இப்பயிற்சி முகாமில் கலந்து கொள்ளலாம்.

இப்பயிற்சி முகாம் <u>**மேலப்பாளையம் SDAT ஸ்டேடியத்தில்**</u> தினமும் காலை 6.15 மணி முதல் 8.30 மணி வரை நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட அனைவருக்கும் ரோஸ்மில்க் வழங்கப்பட்டது. இப்பயிற்சி முகாமின் நிறைவு நாள் அன்று அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இந்நிகழ்வில், செல்வன் மருத்துவமனை அதிபர் டாக்டர். பிரேமச் சந்திரன், திரு. ஷாகுல் ஹமீது, தடகளப் பயிற்றுநர் திரு. சத்யகுமார், டென்னிஸ் பயிற்றுநர் திரு. குமரமணிமாறன், மேலப்பாளையம் SDAT விளையாட்டரங்கப் பொறுப்பாளர் திரு. லெட்சுமணன், உடற்கல்வி ஆசிரியர்கள் திரு. பால்பாண்டி, திருமதி. அனித்தா, திரு. பேச்சிமுத்து ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இதனைத் தொடர்ந்து, 21.04.2017 அன்று முதல் மாலை 3.30 மணி முதல் 6.00 மணி வரை சிவலார்குளம் SDAT விளையாட்டரங்கத்திலும், 22.04.2017 அன்று முதல் காலை 6.15 மணி முதல் 8.30 மணி வரை கல்லிடைகுறிச்சி SDAT விளையாட்டரங்கத்திலும் 5 நாட்கள் உலகத் திறனாய்வு திட்ட பயிற்சி முகாம்கள் மற்றும் 15 நாட்கள் கோடை கால பயிற்சி முகாம்கள் தொடங்குகின்றன.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் **முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள்** தெரிவித்தார்கள்.

ஒம்/–
மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி